Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935


மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, ஜனவரி 18, 2025 | இதழ் 280

# விண்ணில் 2 செயற்கைக்கோள்களை இணைக்கும் இஸ்ரோவின் 'ஸ்பேடெக்ஸ்' திட்டம் வெற்றி

## விஞ்ஞானிகளுக்கு ஜனாதிபதி, பிரதமர் வாழ்த்து

## ரஷ்யா, அமெரிக்கா, சீனாவை தொடர்ந்து 4வது நாடாக இந்தியா சாதனை

சென்னை, 18 ஜனவரி 2025: விண்ணில் 2 செயற்கைக்கோள்களை இணைக்கும் இஸ்ரோவின் ஸ்பேடெக்ஸ் திட்டம் வெற்றி பெற்றது.



விண்ணில் செயற்கைக்கோள்களை ஒன்றாக இணைக்கும் விண்வெளி டாக்கிங் பரிசோதனை என்ற நவீன தொழில்நுட்ப அறிவு பணிக்காக இஸ்ரோ 2 செயற்கைக்கோள்களை வடிவமைத்தது. அவற்றிற்கு 'சேசர்' (ஸ்பேடெக்ஸ்-ஏ), 'டார்கெட்' (ஸ்பேடெக்ஸ்-பி) என பெயரிடப்பட்டது. தலா 220 கிலோ எடை கொண்ட இதனை விண்ணில் வெவ்வேறு சுற்றுப்பாதைகளில் செலுத்தி, விண்வெளியில் 2 செயற்கைக்கோள்களையும் இணைய வைக்கும் கடுமையான பரிசோதனையில் இஸ்ரோ ஈடுபட்டு உள்ளது.

இதற்காக ஆந்திர மாநிலம் திருப்பதி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. சி-60 ராக்கெட், 2 செயற்கைக்கோள்களை சுமந்தபடி கடந்த 30-ம் தேதி விண்ணில் பாய்ந்தது. திட்டமிட்டபடி ராக்கெட்டின் இரு பாகங்கள் அடுத்தடுத்து பிரிந்தன. ராக்கெட் பூமியில் இருந்து புறப்பட்ட 15 நிமிடம் 15 வினாடிகளில் ஸ்பேடெக்ஸ்-பி செயற்கைக்கோள் 475 கிலோ மீட்டரிலும், 15 நிமிடம் 20 வினாடிகளில் ஸ்பேடெக்ஸ்-ஏ செயற்கைக்கோள் 476 கிலோ மீட்டரிலும் வெவ்வேறு சுற்றுப்பாதைகளில் திட்டமிட்ட இலக்கில் நிலை நிலைநிறுத்தப்பட்டிருந்தன.

4வது நாடு - இந்நிலையில் ஸ்பேடெக்ஸ் ஏ, ஸ்பேடெக்ஸ் பி செயற்கைகோள்களை ஒருங்கிணைக்கும் பணியை இஸ்ரோ மேற்கொண்டது. இதன்படி இரு செயற்கைக்கோள்கள் இடையேயான தூரம் 230 மீட்டர் தூரத்தில் இருந்து 15 மீட்டராக குறைக்கப்பட்டு, பின்னர் 3 மீட்டராக குறைக்கப்பட்டது. தீவிர ஆய்வுக்கு பிறகு இரண்டையும் இணைக்கும் பணி நடைபெற்று வந்தது.

இந்நிலையில், ஸ்பேடெக்ஸ் திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது. விண்வெளி டாக்கிங் பரிசோதனை திட்டத்தின் வழியே 2 செயற்கைக்கோள்களும் ஒன்றிணைக்கப்பட்டன. ரஷியா, அமெரிக்கா, சீனாவை தொடர்ந்து இதனை மேற்கொள்ளும் 4-வது நாடு என்கிற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் வெற்றியால் இஸ்ரோ தலைவராக பொறுப்பேற்றுள்ள நாராயணன் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளார்.

முக்கிய மைல்கல் - விண்வெளி ஆராய்ச்சியில் இது ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்தின் வெற்றி பற்றி குழுவினர் விரிவான தரவுகளை பகுப்பாய்வு செய்து வருகின்றனர். தரவுகள் சரிபார்ப்பு நிறைவடைந்த பின்னர் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் என கூறப்பட்டது.

இந்நிலையில், டாக்கிங் பரிசோதனை வெற்றி பெற்றுள்ளது என இஸ்ரோ அறிவித்து உள்ளது. இது ஒரு வரலாற்று தருணம் என்றும் குறிப்பிட்டு உள்ளது. ஸ்பேடெக்ஸ் டாக்கிங் முறையில் நாம் பயணிப்போம் என தெரிவித்து உள்ள இஸ்ரோ, 15 மீட்டர் தொலைவில் இருந்து 3 மீட்டருக்கு செயற்கைக்கோள்கள் இடம் மாற்றம் செய்யப்பட்டு உள்ளன. துல்லிய தன்மையுடன் டாக்கிங் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதனால், செயற்கைக்கோள்களை இணைக்கும் பணி வெற்றியடைந்து உள்ளது. அவற்றை நிலைப்படுத்தும் பணியும் வெற்றி பெற்று உள்ளது. ஒட்டுமொத்த குழுவினருக்கும் வாழ்த்துகள். இந்தியாவுக்கும் வாழ்த்துகள் என இஸ்ரோ வெளியிட்டு உள்ள எக்ஸ் சமூக ஊடக பதிவு தெரிவிக்கின்றது.

இதேபோன்று, செயற்கைக்கோள்களை இணைத்த பின்னர், அவற்றை கட்டுப்படுத்தும் பணியும் வெற்றி பெற்றுள்ளது. வரவிருக்கிற நாட்களில், செயற்கைக்கோள்களை பிரிக்கும் பணி மற்றும் மின்சார பரிமாற்ற சோதனைகளும் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அனாதிபதி - இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "இந்தியாவின் விண்வெளி திறன்களை உயர்த்திய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகள். ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் வெற்றியானது, இந்திய விண்வெளி திட்டத்தில் புதிய வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது" என்றார்.

பிரதமர் மோடி வாழ்த்து - இந்த நிலையில் விண்வெளியில் செயற்கைக்கோள்களை இணைக்கும் இஸ்ரோவின் ஸ்பேடெக்ஸ் திட்டம் வெற்றியடைந்ததை அடுத்து பிரதமர் நரேந்திர மோடி விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "விண்வெளியில் செயற்கைக்கோள்களை இணைப்பதை வெற்றிகரமாக நிரூபித்த இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கும், ஒட்டுமொத்த விண்வெளி சகோதரர்களுக்கும் வாழ்த்துகள். இது வரும் ஆண்டுகளில் இந்தியாவின் லட்சிய விண்வெளி பயணங்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்" என்று தெரிவித்துள்ளார்.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் பலியான மாடுபிடி வீரரின் குடும்பத்துக்கு ஸ்டாலின் ரூ.3 லட்சம் நிதி உதவி

சென்னை, 18 ஜனவரி 2025: மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் உயிரிழந்த மாடுபிடி வீரரின் குடும்பத்தினருக்கு 3 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

மதுரை மாவட்டம், அவனியாபுரத்தில் 14ந் தேதி அன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், விளாங்குடியைச் சேர்ந்த நவீன்குமார் என்ற மாடுபிடி வீரர் மாடு முட்டியதில் காயமடைந்து உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 3 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

# ஸ்வமித்வா திட்டத்தின் கீழ் சொத்து உரிமையாளர்களுக்கு 65 லட்சத்துக்கும் அதிகமான சொத்து அட்டைகளை பிரதமர் ஜனவரி 18 அன்று வழங்குகிறார்

## இலக்கு கிராமங்களில் 92% ட்ரோன் கணக்கெடுப்பு ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளது. 2.25 கோடி சொத்து அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன




சென்னை, 18 ஜனவரி 2025: ஸ்வமித்வா திட்டத்தின் கீழ் 65 லட்சத்துக்கும் அதிகமான சொத்து அட்டைகளை 10 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 230 மாவட்டங்களைச் சேர்ந்த 50,000-க்கும் அதிகமான கிராமங்களில் உள்ள சொத்து உரிமையாளர்களுக்கு இன்று பிற்பகல் 12:30 மணியளவில் பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி காட்சி மூலம் வழங்குகிறார்.

அண்மைக்கால ட்ரோன் தொழில்நுட்பத்தின் மூலம் கிராமங்களில் கணக்கெடுப்பு செய்து வீடுகள் வைத்திருக்கும் குடும்பங்களுக்கு 'உரிமைகளின் பதிவு' வழங்குவதன் மூலம் கிராமப்புற இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தும் தொலைநோக்குடன் ஸ்வமித்வா திட்டம் பிரதமரால் தொடங்கப்பட்டது.

சொத்துகளை பணமாக்குவதற்கும், வங்கிக் கடன்கள் பெற்று அதன் மூலம் நிதிநிறுவனக் கடனை அடைப்பதற்கும், சொத்து தொடர்பான தகராறுகளைக் குறைப்பதற்கும், கிராமப்புறங்களில் சொத்துகள் மற்றும் சொத்து வரியை சிறந்த முறையில் மதிப்பீடு செய்வதற்கும் கிராம அளவில் விரிவான திட்டமிடலை செயல்படுத்துவதற்கும் இந்தத் திட்டம் உதவுகிறது.

3.17 லட்சத்துக்கும் அதிகமான கிராமங்களில் ட்ரோன் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளது. இது இலக்கு கிராமங்களில் 92 சதவீதமாகும். இதுவரை, 1.53 லட்சம் கிராமங்களுக்கு, 2.25 கோடி சொத்து அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், திரிபுரா, கோவா, உத்தராகண்ட், ஹரியானா ஆகியவற்றில் இந்தத் திட்டம் முழு வளர்ச்சியை எட்டியுள்ளது. மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களிலும், பல யூனியன் பிரதேசங்களிலும் ட்ரோன் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளது.

# சிங்கப்பூர் அதிபருக்கு ஜனாதிபதி மாளிகையில் சிகப்பு கம்பள வரவேற்பு

சென்னை, 18 ஜனவரி 2025: தென்கிழக்கு ஆசிய நாடான சிங்கப்பூரின் அதிபர் தர்மன் சண்முகரத்னம் அரசு முறைப்பயணமாக இந்தியா வந்துள்ளார். அவருக்கு, ஜனாதிபதி மாளிகையில் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டோர் வரவேற்றனர்.



பிரதமர் மோடியை சிங்கப்பூர் அதிபர் தர்மன் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசிக்க உள்ளார். அப்போது முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக, கடந்த 2015ம் ஆண்டு சிங்கப்பூரின் அப்போதைய அதிபர் டோனி டன் கிங் யாம், புதுடில்லிக்கு வருகைத் தந்தார். அதன் பின்னர் கடந்த 10 ஆண்டுகளில் சிங்கப்பூர் நாட்டின் அதிபர் இந்தியாவிற்கு வருவது இதுவே முதல்முறை.

நம் அண்டை நாடான இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்னம், ஏற்கனவே சிங்கப்பூர் துணை பிரதமர், நிதியமைச்சர், கல்வி அமைச்சர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து சிங்கப்பூர் அதிபர் தர்மன் சண்முக ரத்னம் கூறுகையில், சிறிய நாடான சிங்கப்பூர் மற்றும் மிகப்பெரிய நாடான இந்தியா இடையே உறவு வலுவாக இருக்கிறது. இந்தியாவிற்கும், சிங்கப்பூருக்கும் இடையிலான வணிக உறவுகள் செழித்து வருகின்றன. சிங்கப்பூர் பல ஆண்டுகளாக இந்தியாவில் மிகப்பெரிய முதலீட்டாளராக உள்ளது. இந்தியா மற்றும் சிங்கப்பூர் இடையே பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன' என்று அவர் கூறினார்.

# பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சருடன் பாதுகாப்பு அமைச்சர் தொலைபேசியில் உரையாடினார்

சென்னை, 18 ஜனவரி 2025: பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் 2025 ஜனவரி 16 அன்று பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஜான் ஹீலியுடன் தொலைபேசியில் உரையாடினார். இரு அமைச்சர்களும் தற்போது நிலவும் பாதுகாப்பு ஒத்துழைப்பு விஷயங்கள் குறித்து சுருக்கமாகப் பேசியதுடன், இருதரப்பு உறவுகளை உயிர்ப்புடன் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

மின்சார உந்துவிசை சாதனம், ஜெட் என்ஜின்கள் போன்ற முக்கிய பாதுகாப்பு தொழில்நுட்ப துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சிறந்த முன்னேற்றம் குறித்து இந்திய பாதுகாப்பு அமைச்சரும், பிரிட்டன் பாதுகாப்புத்துறை அமைச்சரும் ஆய்வு செய்தனர். மின்சார உந்துவிசை சாதனம் குறித்த விருப்ப ஆவணம் அண்மையில் கையெழுத்தானது குறித்து அவர்கள் திருப்தி தெரிவித்தனர். பயிற்சி நிறுவனங்களில் ராணுவ பயிற்றுவிப்பாளர்களை பரிமாறிக் கொள்வது குறித்தும் தற்போது நடைபெற்று வரும் பயிற்சி திட்டங்கள் குறித்தும் இரு அமைச்சர்களும் ஆய்வு செய்தனர். இந்தோ-பசிபிக் மீது இங்கிலாந்தின் கவனம் அதிகரித்துள்ள நிலையில், இரு தரப்பினரும் 2025-ம் ஆண்டில் கூட்டுப் பணி மற்றும் மேம்பட்ட கடல்சார் ஈடுபாடுகளின் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வார்கள்.


PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

# ஐஎம்டிபி தனது 2025 இன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியத் திரைப்படங்களை அறிவிக்கிறது

## உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான ஐஎம்டிபி வாடிக்கையாளர்களின் பக்கப்பார்வைகளின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியத் திரைப்படம் சிக்கந்தர் ஆகும்.

சென்னை, 18 ஜனவரி 2025: திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் பிரபலங்கள் பற்றிய தகவல்களுக்கான உலகின் மிகவும் பிரபலமான மற்றும் அதிகாரப்பூர்வ ஆதாரமான ஐஎம்டிபி (www.imdb.com), தன்னுடைய உலகளாவிய 250 மில்லியனுக்கும் அதிகமான மாதாந்திர பார்வையாளர்களின் உண்மையான பக்கப்பார்வைகளால் தீர்மானிக்கப்பட்ட 2025 இன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய திரைப்படங்களை இன்று வெளியிட்டது,

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியத் திரைப்படமான சிக்கந்தரின் இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ், “2025 ஆம் ஆண்டின் மிவிஞிதீ அதிகம் எதிர்பார்க்கப்பட்ட இந்தியத் திரைப்படங்கள் பட்டியலில் சிக்கந்தர் முதலிடத்தைப் பிடித்ததைக் கண்டு நான் மிகவும் தாழ்மையுடன் இருக்கிறேன்!" எனகூறியுள்ளார்! சல்மான்கானுடன் பணிபுரிந்தது நம்ப முடியாதது. அவரது ஆற்றலும் அர்ப்பணிப்பும் சிக்கந்தரை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத வழிகளில் உயிர்ப்பிக்கிறது. அதை நிறைவேற்றிய சஜித்நதியத்வாலாவுக்கு மிக்க நன்றி. சிக்கந்தரின் ஒவ்வொரு காட்சியும் அழியாத தடம் பதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பார்வையாளர்களுடன் என்றென்றும் நிலைத்திருக்க ஒவ்வொரு தருணத்தையும் வடிவமைப்பதில் என் இதயத்தை ஊற்றியுள்ளேன்.




ஐஎம்டிபி 2025 இன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியத் திரைப்படங்கள்

1. சிக்கந்தர், 2.டாக்சிக், 3.கூலி, 4.ஹவுஸ்ஃபுல், 5.பாகி, 6. ராஜாசாப், 7.வார், 8.எல்2 எம்புரான், 9.தேவா, 10.ச்சாவா, 11. கண்ணப்பா, 12.ரெட்ரோ, 13.தக்லைப், 14.ஜாட், 15.ஸ்கைஃபோர்ஸ், 16.சிதாரேஜமீன்பர், 17.தாமா, 18.காந்தாரதிலெஜெண்ட்: அத்தியாயம் 1, 19.ஆல்பா, 20.தண்டல்

2025 இல் திட்டமிடப்பட்ட வெளியீடுகளைக் கொண்ட இந்தியத் திரைப்படங்களில், இந்தத் தலைப்புகள் ஐஎம்டிபி வாடிக்கையாளர்களிடையே தொடர்ந்து மிகவும் பிரபலமாக இருந்தன, இது உலகளவில் ஐஎம்டிபி க்கு 250 மில்லியனுக்கும் அதிகமான மாதாந்திர பார்வையாளர்களின் உண்மையான பக்கக் காட்சிகளால் தீர்மானிக்கப்படுகிறது.

பட்டியலில் உள்ள 20 தலைப்புகளில் 11 ஹிந்தி படங்கள், தலா மூன்று தமிழ் மற்றும் தெலுங்கு, இரண்டு கன்னடம், ஒன்று மலையாள படம் என்பது குறிப்பிடத்தக்கது. ஹவுஸ்ஃபுல் 5 (எண். 4), கண்ணப்பா (எண். 11), மற்றும் ஸ்கைஃபோர்ஸ் (எண். 15) ஆகிய மூன்று படங்களில் அக்ஷய்குமார் நடித்துள்ளார், மேலும் ராஷ்மிகா மந்தனாவும்: சிக்கந்தர் (எண். 1), சாவா (எண். 10), மற்றும் தாமா (எண். 17). மோகன்லால், பிரபாஸ், பூஜா ஹெக்டே மற்றும் கியாரா அத்வானி ஆகியோர் தலா இரண்டு தலைப்புகளில் நடித்துள்ளனர். பட்டியலில் உள்ள ஐந்து தலைப்புகள் பிரபலமான உரிமையாளர்களின் தொடர்ச்சிகள் அல்லது தவணைகளாக உள்ளது :ஹவுஸ்ஃபுல் 5 (எண். 4), பாகி 4 (எண். 5), போர் 2 (எண். 7), சிதாரேஜமீன்பர் (எண். 16), மற்றும் காந்தாரா லெஜண்ட்: அத்தியாயம் 1 (எண். 18).

ஐஎம்டிபி வாடிக்கையாளர்கள் இந்த மற்றும் பிற தலைப்புகள் கிடைக்கும் போது விழிப்பூட்டல்களைப் பெற, அவர்களின் ஐஎம்டிபி கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்கலாம்.

# இந்தியாவில் 82% தொழில் வல்லுநர்கள் 2025 இல் புதிய வேலையைத் தேடுகிறார்கள், ஆனால் தேடல் முன்னெப்போதையும் விட கடினமாக உள்ளது

சென்னை, 18 ஜனவரி 2025: இந்தியாவில் 5 இல் 4 (82%) தொழில் வல்லுநர்கள் இந்த ஆண்டு ஒரு புதிய

வேலையைத் தேட திட்டமிட்டுள்ளனர், இருப்பினும் பாதிக்கும் மேற்பட்டவர்கள் (55%) கடந்த ஆண்டில்வேலை தேடுவது கடினமாகிவிட்டது என்று உலகின் மிகப்பெரிய தொழில்முறை நெட்வொர்க்கான லிங்க்ட்இனின் புதிய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டு பங்கு (69%) இந்திய மனிதவள வல்லுநர்கள் இதையே உணர்கிறார்கள், இது 2025 ஆம் ஆண்டில் தொழில் வல்லுநர்கள் ஒரு வேலைக்கு விண்ணப்பிக்க வேண்டிய - மற்றும் சேர்ந்த வேளையில் - தேவையான மாற்றத்தை சமிக்ஞை செய்கிறது.

சவாலான வேலைச் சந்தையில் நிலையான நம்பிக்கை - 2024 இல் வேலை தேடுபவர்கள் மந்தமான தொழிலாளர் சந்தையை எதிர்கொண்டனர், 2025 தொடங்கும் போது, 2024 ஆம் ஆண்டில் புதிய வேலையைத் தேடும் ஐந்தில் ஒருவர் (15%) பணிபுரியும் தொழில் வல்லுநர்கள் இன்னும் புதிய வாய்ப்புகளைத் தேடுகிறார்கள். கடுமையான சந்தை சிலவற்றைத் தடுத்துள்ளது, 37% பேர் 2025 ஆம் ஆண்டில் வேலை தேடத் திட்டமிடவில்லை என்று கூறியுள்ளனர். ஆனால், வேலைச் சந்தை மேம்படும் என்று 58% பேர் நம்புவதாகவும், 2025 ஆம் ஆண்டில் புதிய வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருப்பதாகவும் பலரிடையே நம்பிக்கை அதிகரித்து வருகிறது.

தொழில் வல்லுநர்கள் தங்கள் வேலை தேடலை உடைக்க மாற்றியமைக்க வேண்டும். பல தொழில் வல்லுநர்கள் முடிந்தவரை பல வேலைகளுக்கு விண்ணப்பிக்கிறார்கள் ,ஆனால் இந்த உத்தி பயனுள்ளதாக இல்லை. உண்மையில், 49% வேலை தேடுபவர்கள் முன்னெப்போதையும் விட அதிகமான வேலைகளுக்கு விண்ணப்பிக்கின்றனர், ஆனால் குறைவாகவே அவர்களிடமிருந்து பதில் வருகின்றது , பணியமர்த்துபவர்களும் இந்த செயல் முறையை பெருகிய முறையில் சவாலானதாகக் காண்கின்றனர். மனிதவள வல்லுநர்களில் நான்கில் ஒரு பகுதியினர் (27%) ஒரு நாளைக்கு 3 - 5 மணி நேரம் விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்கிறார்கள், மேலும் 55% பேர் அவர்கள் பெறும் வேலை விண்ணப்பங்களில் பாதிக்கும் குறைவானவர்கள் அனைத்து அளவுகோல்களையும் பூர்த்தி செய்கிறார்கள் என்று கூறுகின்றனர்.

நிராஜிதா பானர்ஜி, தொழில் நிபுணர் மற்றும் லிங்க்ட்இன் இந்தியாவின் மூத்த நிர்வாக ஆசிரியர் கூறுகிறார்; வேலை சந்தை கடினமானது, ஆனால் இந்தியர்கள் தங்கள் வேலை தேடலில் மிகவும் சிந்தனைமிக்க அணுகுமுறையை எடுக்க இது ஒரு நினைவூட்டலாகும். சரியான திறன்களை உருவாக்குவது முக்கியம், ஆனால் உங்கள் சென்டர் சுயவிவரத்தைப் புதுப்பிப்பது மற்றும் உங்கள் திறன்களுடன் உண்மையிலேயே பொருந்தக்கூடிய பாத்திரங்களில் கவனம் செலுத்துவது. மிகவும் மூலோபாயமாகவும் வேண்டுமென்றும் இருப்பது சவாலான வேலை சந்தையில் கூட புதிய வாய்ப்புகள் மற்றும் அர்த்தமுள்ள தொழில் வளர்ச்சியுடன் உங்களுக்கு வெகுமதி அளிக்கும்.

# தங்கம் விலை மீண்டும் ரூ.59 ஆயிரத்தை கடந்தது

சென்னை, 18 ஜனவரி 2025: தங்கம் விலை இன்று மீண்டும் ஒரு சவரன் ரூ.59 ஆயிரத்தை கடந்தது. இது நகை வாங்கும் பெண்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சர்வதேசப் பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. கடந்த ஆண்டு தீபாவளியின்போது (அக்டோபர் மாதம்) அதிகபட்சமாக ஒரு சவரன் ரூ.59 ஆயிரத்தை கடந்து விற்பனையானது. பின்னர், தங்கம் விலை குறையத் தொடங்கியது. பின்னர் மீண்டும் படிப்படியாக அதிகரித்து வருகிறது.

அதன்படி சென்னையில் இன்று தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 அதிகரித்து ஒரு கிராம் ரூ.7,390-க்கும், சவரனுக்கு ரூ.400 அதிகரித்து ஒரு சவரன் ரூ.59,120-க்கும் விற்பனையாகிறது. வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ.2 உயர்ந்து ஒரு கிராம் ரூ.103-க்கு விற்பனையாகிறது..

# அதானி குழுமத்துக்கு எதிரான செய்தி வெளியிட்ட அமெரிக்க ஹிண்டன்பர்க் நிறுவனம் மூடல்

சென்னை, 18 ஜனவரி 2025: அதானி குழுமத்தின் மீது தொடர் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வந்த அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனத்தை நிரந்தரமாக மூடுவதாக அதன் நிறுவனர் நேட் ஆண்டர்சன் அறிவித்துள்ளார்.

அதானியின் அதானி குழுமம் மீதான குற்றச்சாட்டுகள் மூலம் இந்த நிறுவனம் மிகவும் புகழ்பெற்றது. இந்த நிறுவனத்தின் குற்றச்சாட்டால் அதானி நிறுவனம் பல லட்சம் கோடிகளை ஒரிரு நாள்களில் இழந்தது. இந்தக் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட அதானி நிறுவனம் பங்குச் சந்தையில் கடுமையான இழப்புகளையும் சந்திக்க நேரிட்டது.




2023 ஆம் ஆண்டில் அதானி குழுமத்திற்கு எதிரான அதன் அறிக்கையில் வெட்கக்கேடான கார்ப்பரேட் மோசடி என்று குற்றம் சாட்டியதன் விளைவாக சுமார் 150 பில்லியன் டாலர்களை அதானி நிறுவனம் பறிகொடுத்தது.“ஹிண்டன்பர்க் நிறுவனத்தை மூடுவதற்கான காரணம் எதுவுமில்லை. மிரட்டல், உடல்நலப் பாதிப்புகள் போன்ற எதுவுமில்லை. கடந்த ஆண்டு குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் எங்கள் குழுவுடன் விவாதித்து இந்த முடிவை எடுத்துள்ளேன். இதனால், ஹிண்டன்பர்க் ஆராய்ச்சி நிறுவனத்தை நிரந்தரமாக மூட முடிவுசெய்துள்ளேன்” என தெரிவித்துள்ளார்.வருகிற ஜனவரி 20 ஆம் தேதி அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்கும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது'' என்று தன் அறிக்கையில் கூறியுள்ளார்.

# சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா

## கிராமியக் கலைஞர்களுக்கு ஒரு நாள் சம்பளம் ரூ.5 ஆயிரமாக உயர்வு: ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, 18 ஜனவரி 2025:

‘சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா' கிராமியக் கலைஞர்களுக்கு ஒரு நாள் ஊதியம் ரூ.5 ஆயிரமாக உயர்த்தப்படுவதாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.





தமிழ் பண்பாட்டை வளர்க்கும் ‘சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா' நிகழ்ச்சி கடந்த 3 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. அதனைத்தொடர்ந்து, இந்த ஆண்டிற்கான சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

சென்னையில் உள்ள 18 இடங்களில் 4 நாட்கள் இந்த நிகழ்ச்சி நடக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கு குழந்தைகள், பெண்கள் என அனைத்து தரப்பு மக்களிடையே பெரும் வரவேற்பும், ஆதரவும் கிடைத்துள்ளது. மக்கள் கூட்டம், கூட்டமாக வந்து ரசித்து, பார்த்து வருகின்றனர்.

சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியில் தற்போது 1,500 கிராமியக்கலைஞர்கள் பங்கேற்று உள்ளனர். இவர்கள் 75 கலைக் குழுக்களாக பிரிந்து 50 வெவ்வேறு கலை வடிவங்களை நிகழ்த்தி வருகின்றனர்.

சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழாவில் பங்குபெறும் கிராமியக் கலைஞர்களுக்கு தங்கும் இடம், உணவு, 2 உடைகள், போக்குவரத்து வசதிகள் உள்பட அனைத்தும் தமிழ்நாடு அரசால் இலவசமாக வழங்கப்பட்டு உள்ளது.

இதுதவிர அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு நாள் ஊதியம் ரூ.5 ஆயிரமாக உயர்த்தி வழங்க முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதற்கு கலைஞர்கள் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இந்த தகவல் தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில், ‘சென்னை சங்கமம் -நம்ம ஊரு திருவிழா' கலை நிகழ்ச்சிகளை பொதுமக்கள் அதிக அளவில் கண்டுகளிக்கும் வகையில் காஞ்சீபுரம், திருவள்ளூர், விழுப்புரம், வேலூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள மின்னணு வீடியோ வாகனங்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு உள்ளது. சென்னை மெரினா கடற்கரை, கோயம்பேடு சென்னை புறநகர் பஸ் நிலையம், கிளாம்பாக்கம் பஸ் நிலையம் மற்றும் மாதவரம்-புறநகர் பஸ் நிலையம் ஆகிய இடங்களில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. நாளை (வெள்ளிக்கிழமை) வரை மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# மக்கள் விரோத தி.மு.க. ஆட்சியை விரட்டி அடிப்போம் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சியை அமைப்போம்: எடப்பாடி உறுதி

## எம்.ஜி.ஆரின் 108-வது பிறந்த நாளையொட்டி தொண்டர்களுக்கு கடிதம்

சென்னை, 18 ஜனவரி 2025: மக்கள் விரோத குடும்ப தி.மு.க. ஆட்சியை வரும் சட்டமன்ற தேர்தலில் விரட்டி அடிப்போம். மீண்டும் அண்ணா தி.மு.க. ஆட்சி அமைய எம்.ஜி.ஆர். பிறந்த நாளில் உறுதி ஏற்போம் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

நம் அரசியல் எதிரிகள் எத்தனை திட்டங்கள் தீட்டினாலும் அனைத்தையும் தவிடு பொடியாக்குவோம் என்றும் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

நாளை எம்.ஜி.ஆரின் 108 வது பிறந்த நாள் தமிழகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

யாரும் அசைக்க முடியாத சக்தியாக விளங்கி, மக்கள் மனதில் நிரந்த இடம் பிடித்த எம்.ஜி.ஆரின் பிறந்த நாளையொட்டி சென்னை ராயப்பேட்டையில் உள்ள அண்ணா தி.மு.க. தலைமை கழகத்தில் நாளை காலை 10 மணிக்கு எம்.ஜி.ஆரின் சிலைக்கு அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். கட்சி கொடியை ஏற்றி வைத்து இனிப்பு வழங்குகிறார். எம்.ஜி.ஆரின் பிறந்த நாளையொட்டி 18 ந் தேதி முதல் 5 நாட்கள் தமிழகம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன.

சென்னை சோழிங்கநல்லூர் கண்ணகி நகரில் நடைபெறும் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் 18 ந் தேதி எடப்பாடி பழனிசாமி பேசுகிறார். இதற்கான ஏற்பாடுகளை சென்னை புறநகர் மாவட்ட செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.கந்தன் செய்து வருகிறார்.

எம்.ஜி.ஆரின் 108 வது பிறந்த நாளையொட்டி அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி தொண்டர்களுக்கு எழுதியுள்ள மடலில் கூறியிருப்பதாவது:

தீய சக்தியிடமிருந்து தமிழக மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அவதாரம் எடுத்துவந்த மங்காப் புகழ்பெற்ற மாமணி; எத்தனை எத்தனை தலைமுறைகள் தவம் செய்து பெற்றார்களோ என்று வியந்து பார்க்கும் வண்ணம் நமக்குக் கிடைத்திட்ட தெய்வப் பிறவி; ஏழை, எளிய மக்களின் கண்ணீரைத் துடைத்த வள்ளல், அண்ணா தி.மு.க. நிறுவனத் தலைவர் எம்.ஜி.ஆரின் 108 வது பிறந்த நாளைக் கொண்டாடும் இத்தருணத்தில், அண்ணா தி.மு.க. உடன்பிறப்புகளுக்கும், கோடானு கோடி புரட்சித் தலைவரின் ரசிகர்களுக்கும், அனைத்துத் தமிழர்களுக்கும், எனது மகிழ்ச்சி கலந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவருக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் பிறந்த நாள் என்பது, ஒரு மகிழ்ச்சியையும், உணர்வுப்பூர்வமான அனுபவங்களையும், தாய்மைப் பாசத்தையும், கருணையையும், மனித நேயத்தையும், மானுடப்பற்றையும் மலரச் செய்யும் பொன்னாள் தான் இந்நாள்.

மக்கள் மனதில் நிற்கும் எம்.ஜி.ஆர்.

வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்'' என்ற கேள்வியை மக்கள் முன் எழுப்பினால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.'', புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.'' என்று தான் பதில் வரும். அந்த அளவிற்கு எம்.ஜி.ஆர். தன்னிகரற்ற மனிதாபிமானம் கொண்ட மனிதராக, திரைத் துறையில் பன்முகத் தன்மை கொண்ட ஆளுமையாக, அரசு நிர்வாகத்தில் ஆட்சி செய்யும் நல்இதயம் படைத்த தீரமும், வீரமும் கொண்டு நிர்வாக ஆற்றல் படைத்த தலைவராக, எதைச் செய்தாலும் அதில் வெற்றிவாகை சூடும் சாதனையாளராக, இவரைப் போல் இன்னொருவர் பிறக்க முடியாது என்று அவருடைய எதிரிகளும் தங்கள் மனதிற்குள் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு சரித்திர நாயகராக வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய ஆட்சிக்குப் பின்னர் தான், அரசாங்கங்கள் ஒரு சாதாரண தனி மனிதனை முன்வைத்து திட்டங்களைத் தீட்ட ஆரம்பித்தன. அந்தத் திட்டங்கள், ஒரு ஜனநாயகம் என்றால் அது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லும் அளவிற்கு இலக்கணம் வகுக்கின்ற திட்டங்களாகவும்,

ஒரு சாதாரண தனி மனிதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் அரசாங்கத்தினுடைய முதல் கடமை என்று உணர்த்துகின்ற திட்டங்களாகவும் அமைந்தன.



வரலாறாக நீடித்து நிற்கும் திட்டங்கள் புரட்சித் தலைவர் கொண்டு வந்த சத்துணவுத் திட்டம், இலவச வேட்டி சேலை திட்டம் உட்பட ஏழை, எளியவர்களுக்காக தீட்டப்பட்ட பல்வேறு திட்டங்கள்தான் இன்றளவும் வரலாறாய் நிலைத்து நிற்கிறது. இனி, எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் இத்தகைய திட்டங்களைத் தான் அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்; இதுபோன்ற திட்டங்களைத்தான் புதிதாக அறிமுகம் செய்ய வேண்டும் என்ற அளவிற்கு, வரலாற்றையே எம்.ஜி.ஆருக்கு முன், எம்.ஜி.ஆருக்குப் பின்' என்று பிரிக்கும் அளவிற்கு ஆட்சி செய்த புகழுக்குரியவர் எம்.ஜி.ஆர்..

அவர் விட்டுச் சென்ற அரசியல் பாடமும், அவர் வாழ்ந்து காட்டிய அரசியல் முறையும் தான் நமக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன.

புரட்சித் தலைவரைத் தொடர்ந்து, புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சிக் காலத்திலும்; அம்மாவின் நல்லாசியோடு செயல்பட்ட, எனது தலைமையிலான ஆட்சியிலும், மக்கள் நலன் சார்ந்து நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் எராளம், ஏராளம்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தால், தமிழ்ச் சமூகத்திற்கு என்னவெல்லாம் தொண்டாற்றி இருப்பாரோ, அவற்றையெல்லாம் செய்து முடிப்பதற்காகத்தான், புரட்சித் தலைவி அம்மாவுக்குப் பிறகு, நம் இருபெரும் தலைவர்களின் நல்லாசியோடு அண்ணா தி.மு.க. தொடர்ந்து மக்கள் பணிகளை தொய்வில்லாமல் ஆற்றி வருகின்றது.

மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் நடைபெற்று வரும் மக்கள் விரோத ஆட்சியை, குடும்ப ஆட்சியை விரட்டவும், புரட்சித் தலைவரின்; புரட்சித் தலைவி அம்மாவின் பேரியக்கத்தை ஆட்சிப் பீடத்தில் மீண்டும் அமர்த்தவும், தமிழக வாக்காளர்கள் ஒவ்வொருவரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பு"ட்சித் தலைவர்; புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியை தமிழ்நாட்டில் மீண்டும் மலரச் செய்யும் மாபெரும் மக்கள் பணியில் நாம் அனைவரும் முழு மனதோடு ஈடுபட இந்நாளில் உளமார உறுதியேற்போம்.

ஜனநாயகத்தை சீர்குலைக்க, நம் அரசியல் எதிரிகள் எத்தனை திட்டங்கள் தீட்டினாலும், அவை அனைத்தையும் தவிடுபொடியாக்கி, தமிழக மக்களுக்கு நல்லாட்சியை வழங்குகின்ற கடமையும், பொறுப்பும், நம் அனைவர் முன்பும் இருக்கின்றது.

அந்தப் பயணத்தில் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவருடைய உழைப்பும், ஆர்வமும் மிகவும் இன்றியமையாததாகும். உங்கள் முயற்சிகள் அனைத்திற்கும் என்றென்றும் நான் உறுதுணையாக இருப்பேன். நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து அண்ணா தி.மு.க.வை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வோம்; வெற்றிவாகை சூடுவோம். ஆர்வத்தோடு தொண்டாற்றுவோம்.

புரட்சித் தலைவர், புரட்சித் தலைவியின் நல்லாட்சியை மலரச் செய்வது, நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை நினைவில் கொண்டு பணியாற்றுவோம்.

பேரறிஞர் அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க! புரட்சித் தலைவி அம்மாவின் புகழ் ஓங்குக.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# மருத்துவ, பொறியியல் படிப்பில் உயர்ந்து வரும் அருந்ததியர் மாணவர்கள் எண்ணிக்கை!

## பள்ளத்தில் நிற்போரைப் படிகளில் ஏற்றிய திராவிட மாடல் அரசு என ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் பெருமிதம்!

சென்னை, 18 ஜனவரி 2025: திராவிட இயக்கமும் தமிழ்நாட்டின் சமூக நீதி வரலாறும் பிரிக்க முடியாத உறவை கொண்டவை. நீதிக்கட்சி அரசு வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணையை வெளியிட்டு, இந்திய சட்டமன்ற வரலாற்றில் முதன்முதலில் இடஒதுக்கீடு முறையை அறிமுகப்படுத்தியது. 1928-ஆம் ஆண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் நிரந்தரமாக்கப்பட்டது. இதனால், அரசியல், கல்வி, வேலைவாய்ப்பு உரிமை அனைத்துத்தரப்பு மக்களுக்கும் கிடைத்தது. அந்த நீதிக் கட்சியின் நீட்சிதான் திமுக அரசு. தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களை கல்வி, பொருளாதார, சமூக, அரசியல் தளத்தில் வலிமையுள்ளவர்களாகவும், வளர்ச்சி அடைந்தவர்களாகவும் உயர்த்த வேண்டும் என்பதுதான் திராவிட இயக்கத்தின் முதன்மை இலட்சியமாகும்.

இந்த இலட்சியப் பயணத்திற்கு பாதை அமைத்துதரும் இடஒதுக்கீட்டு உரிமைகள் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த காலமெல்லாம் உணர்வுப்பூர்வமாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது வரலாறு. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களின் சமூகநீதி உரிமைகளை நிலைநாட்டும் வகையில் திமுக அரசு பல்வேறு வகையான இடஒதுக்கீட்டு சட்டங்களை இயற்றி வரலாறு படைத்துள்ளது.

சமூகத்தின் கடைநிலையில் இருப்பவர்களுக்கும் இடஒதுக்கீட்டின் பயன்கள் கிடைக்கவேண்டும் எனும் சமத்துவ நோக்கோடு பட்டியலின மக்களிடையே மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த அருந்ததியர் சமூக மக்களுக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை 2009-ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த போது வழங்கினார் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர். அதுவரையிலும் பட்டியலின மக்களுக்கான ஒதுக்கீட்டில் முழுமையாக பலனை அடையாத சமூகமாக அருந்ததியர் சமூகம் இருந்து வந்தது. இதனை அப்பொழுது ஓய்வுபெற்ற நீதியரசர் ஜனார்த்தனம் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியும் உறுதிப்படுத்தியிருந்தது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய உள் ஒதுக்கீட்டின் பயனால் அதுவரை கல்வி, வேலைவாய்ப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் பெறாத அருந்ததியர் சமூக மக்கள், இன்றைக்கு உரிய பிரதிநிதித்துவத்தைப் பெற்று வருகிறார்கள் என்பதை சமீபத்தில் வெளியான தரவுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. இதுகுறித்து இன்றைய தி இந்து ஆங்கில நாளிதழில் விரிவான செய்திக்கட்டுரை வெளியாகியுள்ளது.

மருத்துவக் கல்வியில் அருந்ததியர்களின் பிரதிநிதித்துவம் குறித்து வெளிவந்துள்ள தரவுகளின்படி 2018-19-ஆம் ஆண்டில் எம்.பி.பி.எஸ் மருத்துவப் படிப்பு சேர்க்கையில் 3,600 இடங்களில் 107 இடங்கள் அருந்ததியர் மாணவர்களுக்கு கிடைத்திருந்தன. திராவிட மாடல் ஆட்சியில் 2023-2024-ஆம் ஆண்டு எம்.பி.பி.எஸ் மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் 6,553 ஆக உயர்த்தப்பட்டு, அதன் மூலம் 193 அருந்ததிய சமூக மாணவர்கள் மருத்துவ கல்லூரிக்கு சென்றிருக்கிறார்கள்.

பல் மருத்துவ படிப்பை பொறுத்தவரை 2018-2019 ஆண்டில் மொத்தமுள்ள 1,080 இடங்களில் அருந்ததியர் சமூக மாணவர்களின் பிரதிநிதித்துவம் வெறும் 16 இடங்களே! அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 3 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை கூட முழுமையாக பூர்த்தி செய்ய இயலாமல், 1.5 விழுக்காடு அருந்ததியர் சமூக மாணவர்கள் மட்டுமே பல் மருத்துவம் பயின்றார்கள். இந்த அவநிலை 2023-24-ஆம் ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில் மாற்றமடைந்தது. 1,737 பல் மருத்துவ படிப்பிற்கான இடங்களில் அருந்ததியர் பிரிவு மாணவர்கள் 54 பேர் இடம்பெற்றுள்ளனர். அவர்களுக்கான 3 விழுக்காடு பிரதிநிதித்துவம் முழுமையாக கிடைத்தது.

பொறியியல் படிப்புகளைப் பொறுத்தவரை 2009-10 ஆம் ஆண்டில் 1,193 இடங்களை பெற்றிருந்த அருந்ததியர் நிலை, 2023-24 ஆம் ஆண்டில் 3,944 இடங்களை பெற்று உயர்ந்துள்ளது.

ஒட்டு மொத்த பட்டியலின மக்களுக்கான இட ஒதுக்கீட்டில், உள் ஒதுக்கீட்டின் பயனால் அருந்ததியர் பிரிவு மாணவர்கள் பொறியியல் படிப்புகளில் 2016-17 ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் வெறும் 8.7 விழுக்காடு அளவில்தான் பயன் பெற்று வந்த நிலையில், 2023-24 ஆம் ஆண்டில் 16 விழுக்காடு பயனைப் பெற்றுள்ளனர். இதர பட்டியலின சமூக மக்கள் 84 விழுக்காடு பயனடைந்து வருகின்றனர்.

அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை கலைஞர் அவர்கள் நிறைவேற்றிய போது, ''அருந்ததியர் உள் ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை" என அன்றைக்கு சொன்னவர் ஜெயலலிதா. உள் ஒதுக்கீடு வழங்கிவிட்டு அமைதியாக இருக்காமல், அதற்கான தடைகளை தகர்த்து சட்டப் போராட்டங்களை உச்ச நீதிமன்றம் வரையில் போராடியது திமுக. அருந்ததியர் உள் ஒதுக்கீடு தொடர்பான தமிழக அரசின் சட்டம் செல்லும் என்று உச்ச நீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு கடந்த ஆண்டு உத்தரவிட்டது,

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு, எடுத்த முன்னெடுப்புகளால்தான் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்ச நீதிமன்றத்தில் பெற்றதோடு, அருந்ததியர் சமூகத்தினர் மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பில் உரிய பிரதிநிதித்துவத்தையும் பெற்றிருக்கிறார்கள். பள்ளத்தில் கிடப்போரைப் படிகளில் ஏற்றி வைத்திருக்கிறோம் என்ற பெருமிதத்தோடு செயல்படுகிறது திராவிட மாடல் அரசு. சமூக நீதிக்கான இலட்சியப் பயணத்தில் இச்சாதனை ஒரு முக்கிய மைல்கல்.

# ராசிபுரம் அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. சுந்தரம் காலமானார்




சென்னை, 18 ஜனவரி 2025: நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அண்ணா தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 73. அண்ணா தி.மு.க. வை சேர்ந்த பி.ஆர்.சுந்தரம் 1996 முதல் 2001 வரையும், 2001 முதல் 2006 வரையும் 2 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 2014 முதல் 2019 வரை நாமக்கல் மக்களவைத் தொகுதி உறுப்பினராகவும் இருந்தவர். முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மறைவிற்கு பிறகு, ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளராக செயல்பட்டு வந்த நிலையில், பின்னர் தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டு கட்சிப் பணியில் ஆர்வம் காட்டாமல் இருந்து வந்தார். அதன்பிறகு அரசியலில் இருந்து விலகியிருந்த பி.ஆர்.சுந்தரம் உடல்நலம் பாதிப்பு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை அவர் காலமானார்.

### ஸ்டாலின் இரங்கல்

பி.ஆர்.சுந்தரம் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் சமூகவலைதளப் பக்கத்தில், "ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி மற்றும் நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் மறைந்ததை அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

மிக நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட சுந்தரம் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமல்லாது அதற்கு முன்பும் பல்வேறு நிலைகளில் பல பொறுப்புகளில் சிறப்பாக மக்கள் பணி ஆற்றி வந்தவர் ஆவார். 2021ம் ஆண்டு முதல் தி.மு.க.வில் இணைந்து, கொள்கை பரப்புத் துணைச் செயலாளராகவும் சுந்தரம் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், அரசியல் இயக்க நண்பர்கள், நாமக்கல் மாவட்ட மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

## ஐஎன்எஸ் நீல்கிரிக்கு தேவைப்பட்ட சிறப்பு எஃகு முழுவதையும் இந்திய எஃகு ஆணையம் வழங்கியுள்ளது

சென்னை, 18 ஜனவரி 2025:'தற்சார்பு இந்தியா', ' இந்தியாவில் தயாரியுங்கள் ' ஆகியவற்றின் உணர்வையும், பார்வையையும் வலுப்படுத்தும் தனது தீர்மானத்தைத் தொடர்ந்து, மகாரத்னாவும், நாட்டின் மிகப்பெரிய பொதுத்துறை எஃகு தயாரிப்பு நிறுவனமுமான இந்திய எஃகு ஆணையம், ஐஎன்எஸ் நீல்கிரிக்கு 4,000 டன் சிறப்பு எஃகினை வழங்கியுள்ளது. இந்த வலிமைமிக்க கப்பல் பிரதமர் திரு நரேந்திர மோடியால் ஜனவரி 15 அன்று இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டது.

இந்திய எஃகு ஆணையத்தின் பொகாரோ எஃகு ஆலை சுமார் 2,000 டன் தகடுகளை வழங்கியது. பிலாய் மற்றும் ரூர்கேலா எஃகு ஆலைகளால் முறையே 1,600 டன் மற்றும் 400 டன் தகடுகள் வழங்கப்பட்டன. ஐ.என்.எஸ் நீல்கிரி என்பது மசகான் கப்பல்கட்டும் தளத்தின் மூலம் இந்திய கடற்படைக்காக கட்டப்பட்ட போர்க்கப்பலாகும்.

## மத்தியப் பிரதேச மாநிலம் செஹோரில் உள்ள தேசிய மனநல மறுவாழ்வு நிறுவனத்தில் புதிய கட்டடங்களை மத்திய அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் நாளை திறந்து வைக்கிறார்

சென்னை, 18 ஜனவரி 2025: மத்தியப் பிரதேச மாநிலம் செஹோரில் தேசிய மனநல மறுவாழ்வு நிறுவன வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள நிர்வாகம், கல்வி மற்றும் விடுதிக் கட்டடங்களை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் நாளை திறந்து வைக்கிறார். மத்தியப் பிரதேச அமைச்சர்கள் திரு கரண் சிங் வர்மா (வருவாய்), திரு நாராயண் சிங் குஷ்வாஹா (சமூக நீதி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல்), திரு அலோக் சர்மா, நாடாளுமன்ற உறுப்பினர் (போபால்), திரு சுதேஷ் ராய், சட்டமன்ற உறுப்பினர் (செகூர்) ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய மனநல மறுவாழ்வு நிறுவன வளாகத்தில் புதிதாக கட்டப்பட்ட சேவைகள், நிர்வாகம், கல்வியாளர்கள் விடுதி மற்றும் ஸ்டுடியோ அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. இந்த நிறுவனத்தின் சேவைப் பிரிவில் நரம்பியல் சிகிச்சை, இயன்முறை மருத்துவம், பேச்சுப் பயிற்சி, தொழில்முறை நோய் சிகிச்சை, எம்.ஆர்.ஐ., சி.டி ஸ்கேன், ரேடியாலஜி, எக்ஸ்ரே அறைகள், தினப்பராமரிப்பு சேவைகள் போன்றவை வழங்கப்படுகின்றன. சேவைத் தொகுப்பில் மருத்துவர்கள், மருத்துவ கண்காணிப்பாளர், பதிவு மற்றும் உதவி மையம், மருத்துவ ஊழியர்களுக்கான அறைகள், சரக்கு அறை, சமையலறை, உணவு விடுதிகள் போன்றவற்றிற்கு சுமார் 70 அறைகள் உள்ளன. நிறுவனத்தின் ஸ்டுடியோ அடுக்ககம் 23 இரட்டை படுக்கை அறை, ஒரு சரக்கு அறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் கல்வித் தொகுப்பு சுமார் 60 அறைகளைக் கொண்டுள்ளது. இதில் 16 வகுப்பறைகள், ஒரு நூலகம், பேராசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்கள், நிர்வாக ஊழியர்களுக்கான அறைகள் உள்ளன. தரை தளத்தில் உள்ள அதன் பல்நோக்கு கூடத்தில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான தொடக்க நிலை சிகிச்சை மையம் உள்ளது. இந்நிறுவனத்தின் மாணவர்களுக்கு 62 இரட்டை படுக்கை மற்றும் 51 ஒற்றை படுக்கை அறைகள், மாற்றுத்திறனாளிகள் மாணவர்களுக்கு, 02 இரட்டை படுக்கை மற்றும் 02 ஒற்றை படுக்கை அறைகள் ஒதுக்கப்பட்ட விடுதி வசதி வழங்கப்பட்டுள்ளது.

## "2026 சட்டமன்ற தேர்தலுக்கு முன் வெற்றிக்கான அறிகுறியாக ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்:" அமைச்சர் பி.கே.சேகர்பாபு உறுதி

சென்னை, 18 ஜனவரி 2025: "யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்பது போல 2026 சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு வெற்றிக்குண்டான அறிகுறியாக வெளிச்சமாக ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் இருக்கும்" ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் இருக்கும். பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் இதுவரை இல்லாத வாக்கு வித்தியாசத்தில் ஈரோடு இடைத்தேர்தல் நாளை எதிர்கொள்வோம். கூட்டணி மதிக்கின்ற ஒரு தலைவர் என்றால் தமிழக முதல்வரை போல் கூட்டணி தலைவர்களை மதிப்பவர்களை எங்கும் காண முடியாது. கேட்கின்ற போதெல்லாம் கூட்டணி தலைவர்களுக்கு சட்ட பேரவையில் வாய்ப்பை தருகிறார் என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, இன்று (16 ந் தேதி) சென்னை வால்டாக்ஸ் சாலையில் உள்ள சானிக்குளம், திருவள்ளுவர் மன்றம் அருகில் துறைமுகம் மேற்கு பகுதி 54 -வது வட்டம் சார்பில் 400 மங்கையர்கள் ஒன்றுகூடி தைத்திருநாள் மற்றும் சமத்துவ பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியில் உரி அடித்தும், சிலம்பம் சுற்றியும், கால்நடைகளுக்கு பழங்கள் வழங்கியும் சமத்துவ பொங்கலை அப்பகுதி மக்களுடன் கொண்டாடி மகிழ்ந்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நடைபெறுகின்ற குற்றச் சம்பவங்களை தடுப்பது ஒரு புறம், நடந்த முடிந்த பிறகு அதன் மீது நடவடிக்கை எடுப்பது மறுபுறம். இந்த



ஆட்சியில் இன்னார் இனியவர் என்று பாகுபாடு கிடையாது, தவறு யார் செய்திருந்தாலும் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்ற சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது.

ஐ.ஐ.டி சம்பவம் தொடர்பாக உரிய குற்றவாளி கைது செய்து கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். குற்றச்சம்பவங்கள் நடக்காமல் இருக்க காவல்துறையை முதலமைச்சர் முடக்கிவிட்டுள்ளார். குற்ற சம்பவம் நடந்தால் அதன் மீது 24 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்கின்ற ஆட்சியாக இந்த ஆட்சி உள்ளது.

வேட்பாளரோடு சேர்ந்து கட்சியின் மூத்த நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர் ஒன்றாக இணைந்து தான் இந்த வேட்பாளரை தேர்வு செய்து ஆதரித்திருக்கிறார்கள். கூட்டணி கட்சியை மதிக்கின்ற ஒரு தலைவர் நாட்டிலே உண்டு என்றால் அது தமிழ்நாடு முதலமைச்சர் தான். கூட்டணி கட்சியினர் குறைகளை சொன்னாலும் கூட அதனையும் நிவர்த்தி செய்து அதன் பிறகு அவர்களை அழைத்து குற்றத்தின் பின்னணி, குற்றத்தின் விளக்கத்தையும் விளக்கி, அசைக்க முடியாத இரு கரங்களாக கைகோர்த்துக்கொண்டு பயணித்துக் கொண்டிருக்கிறது தி.மு.க. கூட்டணி.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித் துறை செயலாளராக திரு வினீத் ஜோஷி பொறுப்பேற்றார்

சென்னை, 18 ஜனவரி 2025: மத்திய கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித் துறை செயலாளராக திரு வினீத் ஜோஷி புதுதில்லி சாஸ்திரி பவனில் பொறுப்பேற்றுக் கொண்டார். திரு ஜோஷி பதவியேற்றதைத் தொடர்ந்து, அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்த நியமனத்திற்கு முன், அவர் மணிப்பூரின் தலைமைச் செயலாளராக பணியாற்றினார். தேசிய தேர்வு முகமையின் தலைமை இயக்குநர், மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் தலைவர், கல்வி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் உள்ளிட்ட கல்வித் துறையில் பல முக்கிய பதவிகளை அவர் வகித்துள்ளார்.

திரு ஜோஷி கான்பூர் ஐஐடியில் எந்திரப் பொறியியல் பட்டமும், வெளிநாட்டு வர்த்தகத்திற்கான இந்திய நிறுவனத்தில் எம்பிஏ பட்டமும் பெற்றுள்ளார்.

## குஜராத் மாநிலம் மெஹ்சானாவில் உள்ள கன்பத் பல்கலைக்கழகத்தின் 18-வது பட்டமளிப்பு விழாவில் மத்திய அமைச்சர் திரு அமித் ஷா உரையாற்றினார்

சென்னை, 18 ஜனவரி 2025: மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவு அமைச்சர் திரு அமித் ஷா, குஜராத்தின் மெஹ்சானாவில் உள்ள கன்பத் பல்கலைக்கழகத்தின் 18-வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், பல்கலைக்கழகத்தின் புரவலர் தலைவர் திரு கணபத் படேல் மற்றும் குஜராத் மாநிலத்தின் உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சர் திரு ருஷிகேஷ் படேல் மற்றும் இதர பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், இன்று 4,175 மாணவர்கள் பட்டம் பெறுகிறார்கள் என்று குறிப்பிட்டார். புதிய விஷயங்களைக் கற்று புதிய உச்சங்களை அடையும் போக்குதான் மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கு அடிப்படை என்று அவர் வலியுறுத்தினார். நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் போது, பிரதமர் திரு நரேந்திர மோடி, சுதந்திரத்திற்கான போராட்டங்கள் மற்றும் சுதந்திரம் அடைந்ததில் இருந்து, இதுவரை செய்த சாதனைகள் குறித்து தேசத்தின் இளைஞர்களுக்கு நினைவுபடுத்தினார் என்று திரு அமித் ஷா கூறினார். நாடு சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா அனைத்துத் துறைகளிலும் முதலிடத்தில் இருக்கும் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், கடந்த 10 ஆண்டுகளில் உலக அளவில் உற்பத்தியின் மையமாக இந்தியா மாறியுள்ளது என்று திரு அமித் ஷா கூறினார். இன்று, ஒவ்வொரு உலக நிறுவனமும் இந்தியாவில் தங்கள் ஆலைகளை அமைக்க ஆர்வமாக உள்ளன. திறன் இந்தியா மற்றும் டிஜிட்டல் இந்தியா போன்ற முயற்சிகள் இளைஞர்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். கடந்த 10 ஆண்டுகளில் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை திரு அமித் ஷா பட்டியலிட்டார். இந்தக் காலகட்டத்தில், எட்டு ஐ.ஐ.எம்கள், ஏழு ஐ.ஐ.டிகள், இரண்டு ஐ.ஐ.எஸ்.இ.ஆர்கள், ஒரு என்.ஐ.டி, 16 ஐ.ஐ.ஐ.டிகள், ஆறு புதிய மத்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் 54 தனியார் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன, இது மில்லியன் கணக்கான இளைஞர்களுக்கு உயர் கல்விக்கான ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கியது.

நோட்டு புத்தகங்களை மாற்றிக் கொள்வதற்கு பதிலாக யோசனைகளை பரிமாறிக்கொள்ள இளைஞர்களை அமைச்சர் ஊக்குவித்தார். மதிப்பெண்கள் சார்ந்த மனப்பான்மைக்கு பதிலாக அறிவு சார்ந்த மனநிலையின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

## அயர்லாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஸ்மிருதி மந்தனா - பிரதிகா ராவல் அதிரடி இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 435 ரன்கள் அடித்து அபாரம்: 304 ரன் வித்தியாசத்தில் வெற்றி




சென்னை, 18 ஜனவரி 2025: அயர்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 435 ரன்கள் அடித்து அபார சாதனை படைத்தது.

அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்திலும், 2-வது ஆட்டத்தில் 116 ரன் வித்தியாசத்திலும் இந்திய அணி எளிதில் வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது. இந்த நிலையில் இந்தியா-அயர்லாந்து மகளிர் அணிகள் இடையிலான 3-வது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் உள்ள சவுராஷ்டிரா கிரிக்கெட் சங்க ஸ்டேடியத்தில் நேற்ற நடந்தது.

பூாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. இதன்படி களம் இறங்கிய இந்திய மகளிர் அணியில் தொடக்க வீராங்கனைகள் பிரதிகா ராவல் மற்றும் கேப்டன் ஸ்மிருதி மந்தனா ஆகியோர் அதிரடியாக விளையாடி ரன்களை குவித்தனர். இந்த ஜோடியை பிரிக்க முடியாமல் அயர்லாந்து வீராங்கனைகள் தடுமாறினர். ஸ்மிருதி மந்தானா 70 பந்துகளில் தனது சதத்தை பதிவு செய்து அசத்தினார். இதன் மூலம் இந்திய மகளிர் கிரிக்கெட்டில் அதிவேகமாக சதம் அடித்த வீராங்கனை என்ற பெருமையை ஸ்மிருதி மந்தானா படைத்தார். ஒருநாள் போட்டியில் ஸ்மிருதி மந்தனாவுக்கு இது 10வது சதம் என்பதால் ஆசியாவில் அதிக சதங்கள் அடித்த இங்கிலாந்து அணியின் டாமி பேமோட்டின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார். 80 பந்துகளில் 135 ரன்கள் எடுத்து மந்தனா ஆட்டமிழந்தார். இதன் மூலம் முதல் விக்கெட்டுக்கு இந்த ஜோடி 233 ரன்கள் சேர்த்து சாதனை படைத்தது.

மறுமுனையில் தொடர்ந்து அபாரமாக விளையாடி வந்த பிரதிகா ராவல் 129 பந்துகளில் 154 ரன்கள் எடுத்தார். இறுதியில் ரிச்சா கோஸ் 59 ரன்களும், தேஜால் 28 ரன்களும், ஹர்லின் டியோல் 15 ரன்கள் எடுக்க இந்திய மகளிர் அணி 50 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 435 ரன்கள் எடுத்து சாதனை படைத்தது. இதன் மூலம் மகளிர் கிரிக்கெட்டில் இந்திய அணி தங்களுடைய அதிகபட்ச அணி ஸ்கோரை நிர்ணயித்திருந்தது.

இதனையடுத்து 436 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை எதிர்கொண்ட அயர்லாந்து மகளிர் அணியினர் ஆரம்பம் முதலே ரன்களை சேர்க்க தடுமாறினர். கேப்டன் கேபி லீவிஸ் 1 ரன்னிலும், கிறிஸ்டினபடக் அவுட்டாகியும், ஓர்லா 36 ரன்களிலும் ஆட்டமிழக்க, அதிகபட்சமாக தொடக்க வீராங்கனை சாரா போப்ஸ் 41 ரன்கள் எடுத்தார். மற்ற வீராங்கனைகள் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க, அயர்லாந்து மகளிர் அணி 31.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 131 ரன்கள் மட்டுமே எடுத்தது. இந்திய அணியின் சார்பில் அதிகபட்சமாக தீப்தி சர்மா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் இந்திய மகளிர் அணி 304 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று, தொடரையும் 3- 0 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது. ஆண்கள் அணியின் சாதனையை முறியடித்த இந்திய மகளிர் அணி இந்திய ஆடவர் அணி 418 ரன்கள் குவித்ததே சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இந்தியாவின் அதிகபட்ச ஸ்கோராக இருந்த நிலையில், அந்த சாதனையை முறியடித்த இந்திய மகளிர் அணி, அயர்லாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 435 ரன்கள் குவித்து அசத்தி உள்ளது. மேலும் மகளிர் கிரிக்கெட்டில் இந்தியாவுக்கு இது அதிகபட்ச ரன்கள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றி என்பது குறிப்பிடத்தக்கது.